## முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில்

# கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத் தலைவர் பொன்குமார் புதல்வி மணவிழா!

### அமைச்சர் பெருமக்கள் - அனைத்துக் கட்சித்தலைவர்கள் வாழ்த்துகின்றனர்!

சென்னை, பிப்.15 - தமிழ்நாடு விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சியின் நிறுவனத் தலைவரும், தமிழ்நாடு அரசின் கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத் தலைவருமான பொன்குமார் - திருமதி மைதிலி பொன்குமார் ஆகியோரின் புதல்வி செல்வி கே. திவ்யாவுக்கும், சென்னை மாங்காடு பி.கிருஷ்ணன் - திருமதி. கே.கீதா ஆகியோரின் புதல்வர் செல்வன் கே.ரஞ்சித்குமாருக்கும் மணவிழா இன்று (15.2.2024 - வியாழன்) காலை 9 மணியளவில், சென்னை - நீலாங்கரையிலுள்ள ஆர்.கே.கன்வென்சன் சென்டரில் நடைபெறுகிறது.



இந்த மணவிழாவினை தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்துகிறார்.

மணவிழா வரவேற்பு நிகழ்ச்சி நேற்று ( 14.2.2024 - புதன்) மாலை 6 மணியளவில் நீலாங்கரை, ஆர். கே.கன்வென்சன் சென்டரில் நடைபெற்றது.

இம்மணவிழா மற்றும் மணவிழா வரவேற்பு நிகழ்ச்சியில் அமைச்சர் பெருமக்கள், அனைத்துக் கட்சித் தலைவர்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமிழ்நாடு விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி நிர்வாகிகள், தமிழ்நாடு கட்டடத் தொழிலாளர்கள், மத்திய சங்க நிர்வாகிகள், ஆன்றோர், சான்றோர் உள்ளிட்டோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

இன்று நடைபெறும் மணவிழாவில் பொறியாளர் எல்.நந்தகுமார், என். லட்சுமி, சி.காளிமுத்து, கே.கமலா, சி.டில்லிபாபு, டி.சுமதி, ஆர்.செந்தில்நாதன், எஸ்.விஜி, எல்.தேவராசன், டி.மாலதி, எம். பார்த்தசாரதி, பி.மாலதி, என்.லட்சுமிநாராயணன், டாக்டர் என்.ராதா, கோ.பழனி, பி.நிர்மலா உள்ளிட்டோர் வரவேற்கின்றனர்.

நிறைவில் கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியத் தலைவர் பொன்குமார், திருமதி மைதிலி பொன்குமார், கே. வினோத்குமார், திருமதி. ரேவதி வினோத் குமார் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

## சட்டப்பேரவையில்

# அரசின் உரையை ஆளுநர் வாசிக்க மறுத்திருப்பது அநாகரிகத்தின் உச்சம்!

### ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் கண்டனம்!

சென்னை, பிப். 15 - “தமிழ்நாட்டுக்கு எதிராக செயல்படும் ஆர்.என்.ரவி, சட்டப்பேரவையில் ஆளுநர் உரையை வாசிக்க மறுத்திருப்பது அநாகரிகத்தின் உச்சம்” என்று ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் கண்டித்துள்ளது.


தீக்கதிர்

2024 பிப்ரவரி 13 செவ்வாய்க்கிழமை

அட்டூழியத்தின் உச்சம்

தமிழ்நாடு சட்டப் பேரவையில் இந்தாண்டுக்கான முதல் கூட்டத் தொடரில் ஆளுநர் ஆர்.என்.ரவி நடந்து கொண்ட விதம் முற்றிலும் மக்களாட்சி மரபுக்கு எதிரானது. கூட்டாட்சி கோட்பாட்டுக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் தொடர்ந்து செயல்பட்டு வரும் ஆர்.என்.ரவி ஆளுநர் உரையை வாசிக்க மறுத்திருப்பது அநாகரிகத்தின் உச்சம். அவர் தமிழ்நாட்டு

இதுகுறித்து 13.02.2024 தேதிய ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாடு சட்டப் பேரவையில் இந்தாண்டுக்கான முதல் கூட்டத் தொடரில் ஆளுநர் ஆர்.என்.ரவி நடந்து கொண்ட விதம் முற்றிலும் மக்களாட்சி மரபுக்கு எதிரானது. கூட்டாட்சி கோட்பாட்டுக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் தொடர்ந்து செயல்பட்டு வரும் ஆர்.என். ரவி ஆளுநர் உரையை வாசிக்க மறுத்திருப்பது அநாகரிகத்தின் உச்சம். அவர் தமிழ்நாட்டு மக்களை மட்டுமல்ல, இந்திய அரசியல் சாசனத்தையும், இந்திய தேசிய கீதத்தையும் ஒருசேர அவமதிக்கும் பெரும் குற்றத்தை செய்துள்ளார்.

மாநில அரசு தயாரித்த உரைக்கு ஆளுநரும் ஒப்புதல் அளித்துள்ளார். ஆனால் அவை துவங்கும் போது தேசிய கீதத்தை துவக்கத்திலும், இறுதியிலும் பாட வேண்டும் என்று தாம் வலியுறுத்தியதாகவும், அதை மாநில அரசு ஏற்க மறுத்ததால் உரையை முழுமையாக வாசிக்க தமக்கு உடன்பாடு இல்லையென்றும் கூறியி ருக்கிறார். இது தன்னுடைய அட்டூழியத்திற்கு பொருத்தமற்ற ஒரு காரணத்தை கூறுவதே ஆகும். சட்டப் பேரவை துவங்கும் போது தமிழ்த்தாய் வாழ்த்தும், நிறைவடையும் போது தேசிய கீதமும் இசைக்கப்படுவதுதான் காலம் காலமாக பின்பற்றப்படும் மரபு.

அதன்படி தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்பட்டுள்ளது. இறுதியில் தேசிய கீதம் இசைக்கப்படுவதற்கு முன்பே ஆளுநர் அவையிலிருந்து வெளிநடப்பு செய்துள்ளார். இதிலிருந்து தேசிய கீதத்தை இழிவுபடுத்துவது அவர்தான் என்பது தெளிவாகிவிட்டது. ஆளுநர் உரையில் கூறப்பட்டுள்ள சில விசயங்கள் தமக்கு உடன்பாடு இல்லை என்றும் அவர் கூறியிருக்கிறார். இதை கூறுவதற்கு அவ ருக்கு எந்த உரிமையும் இல்லை. ஆளுநர் உரை என்பது மாநில அரசால் தயாரிக்கப்படுவதேயன்றி இவருடைய சொந்தச் சரக்கிற்கான சுருக்குப் பை அல்ல. ஆளுநர் ஆர்.என். ரவி இதை அறியாதவர் அல்ல. மக்களால் தேர்வு செய்யப்பட்ட தி.மு.க. தலைமையிலான மாநில அரசு அமைந்ததில் இருந்து இவருக்கு கருத்தியல் ஒவ்வாமை இருக்கிறது.

அப்படியென்றால் அவர் தமது பதவியை ராஜினாமா செய்துவிட்டு ஆர்.எஸ்.எஸ். அமைப்புக்கு சேவை செய்யப் போய்விடலாம். அதை விடுத்து தொடர்ந்து சர்ச்சைக்குரிய கருத்துக்களை வெளியிட்டு வரும் ஆளுநர் மாநில அரசின் செயல்பாடுகளை முடக்க முயல்கிறார். மக்களால் தேர்வு செய்யப்பட்ட அரசை சீர்குலைப்பது பற்றியே சிந்திக்கிறார். அதன் வெளிப்பாடுதான் அவருடைய ஆணவப் போக்கு. கேரள ஆளுநர் ஆரிப் முகமதுகானும் இப்படித்தான் சண்டித்தனம் செய்கிறார். இத்தகைய ஆளுநர்கள் போட்டி அரசியல் செய்ய நினைத்தால் தங்கள் பதவியை ராஜினாமா செய்துவிட்டு தேர்தல் களத்தில் போட்டியிடட்டும். இல்லையேல் அரசியல் சாசன மரபை இழிவுபடுத்தாமல் இருக்கட்டும்.

இவ்வாறு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

## காவிரி, கொள்ளிடம் பகுதிகளில்

# தடுப்பணைகள் கட்டி நிலத்தடி நீரைச் சேமிக்க கழக அரசு நடவடிக்கை!

### சட்டப்பேரவையில் - அமைச்சர் கே.என்.நேரு அறிவிப்பு!

சென்னை, பிப்.15 - சட்டப்பேரவையில் நேற்று முன்தினம் கேள்வி நேரத்தின்போது, இதுகுறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு :-



**துரை சந்திரசேகரன் :** எங்கள் பகுதியில் கொள்ளிடம் ஆற்றில் சுமார் 35க்கும் மேற்பட்ட இடங்களில் ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டு, நிலத்தடி நீர் எடுக்கப்படுகிறது. இதனால் நிலத்தடி நீர்மட்டம் குறைந்துகொண்டே செல்கிறது. எனவே, கொள்ளிடம் ஆற்றில் பல இடங்களில் ஆய்வு செய்து, தடுப்பணைகள் அமைத்தால்தான் நிலத்தடி நீர்மட்டம் உயரும். அதன்மூலம் விவசாயிகளும் பாதிக்கப்படாமல், கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் நீர்ச் செறிவு பெறுவதற்கு தடுப்பணைகள் அமைக்கப்படுவதற்கான திட்டம் அரசிடம் இருக்கிறதா? அவ்வாறு அமைக்கும்பட்சத்தில், என்னுடைய தொகுதிக்குட்பட்ட விளாங்குடி மற்றும் விஷணம்பேட்டை பகுதிகளில் கொள்ளிடம் ஆற்றில் இரண்டு தடுப்பணைகள் அமைப்பதாக அதிகாரிகள் கூறினார்கள். அது எந்த நிலையில் உள்ளது?

**அமைச்சர் கே.என். நேரு:** முதலமைச்சர் அவர்களிடமும், நீர்வளத் துறை அமைச்சர் அவர்களிடமும் இதுகுறித்து விரிவாகப் பேசியிருக்கிறோம். ஆயிரம் இடங்களுக்கும் மேலாக இத்தகைய தடுப்பணைகள் அமைக்கப்படும் என்று ஏற்கெனவே நீர்வளத் துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு, அதற்கான பணிகள் படிப்படியாக மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. எனவே, உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும்.

கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்காக தற்போது காவேரியிலும், கொள்ளிடத்திலும் 244 இடங்களில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. எனவே, நிலத்தடி நீர் குறையாமல் இருக்க வேண்டுமானால், வருங்காலத்தில் தடுப்பணை கட்டினால் மட்டுமே நிலத்தடி நீரைச் சேமிக்க முடியும். அது அரசின் கவனத்திலும் இருக்கிறது. நிதிநிலைமைக்கேற்ப இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.




சென்னை, சேப்பாக்கம், அரசு விருந்தினர் மாளிகை அருகில் போக்குவரத்துத் துறை இயக்க ஊர்தி சார்பில் நடைபெற்ற ”தேசிய சாலை பாதுகாப்பு மாதம் 2024” (National Road Safety Month 2024) முன்னிட்டு போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு நடைப்பயணத்தை (Road Safety Awareness Walkathon) தொடங்கி வைத்து, சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்களை வழங்கினர். இந்நிகழ்ச்சியில் போக்குவரத்து மற்றும் சாலை பாதுகாப்பு துறை ஆணையர் அ.சண்முகசுந்தரம், சாலைப் பாதுகாப்பு காவல் துறை துணைத் தலைவர் திருமதி எஸ்.மல்லிகா மற்றும் போக்குவரத்துத் துறை உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# உண்மையான நையாண்டிப் போலி!

### ‘தி இந்து’ ஆங்கில நாளேடு தலையங்கம்!

சென்னை, பிப். 15 - மாநில அரசுடன் ஆழமாக கருத்து மாறுபடுகின்ற ஓர் ஆளுநர் பதவியில் நீடிக்க கூடாது என ‘தி இந்து’ ஆங்கில நாளேடு ‘தலையங்கம்’ வெளியிட்டுள்ளது.

அத்தலையங்கம் வருமாறு:-

ஒவ்வொரு ஆண்டும் சட்ட மன்ற முதலாவது கூட்டத்தொடரில் வழக்கமான ஆளுநரின் உரை, அதிகமாக அரசியலாக்கப்படுகிறது. புனிதமான (சட்டமன்ற) நிகழ்வை மறைக்கின்ற அப்படிப்பட்ட பண்பற்ற தகுதியற்ற, ஒவ்வாத கருத்து மாறுபாடுகளுக்குள் ஆளுநர் மாளிகையில் பதவியிலிருப்பவர்களே அடிக்கடி காரணமாக இருக்கின்றனர்.

அண்மை நிகழ்வில், தி.மு.க. அரசினால் தயாரிக்கப் பெற்ற உரையைப் படிக்க தம்மால் இயலாதென்பதை. தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். இரவி தெரிவித்தார்; அந்த உரையில் பல பகுதிகளில் தவறாக வழிநடத்தும் உரிமைக் கோரிக்கைகளும் தகவல்களும் இருந்ததாகக் குறிப்பிட்டிருந்தார். அவற்றைப் படிப்பதென்பது ஆளுநர் உரையை “அரசமைப்புச் சட்ட நையாண்டிப் போலியாக” ஆக்கிவிடக் கூடும் என்று அவர் கூறினார்.

இந்த அரசியல் சட்டப் பிணக்கை அல்லது குறும்புத் தனத்தை பிரிவினைக் கோரிக்கையுடன் சேர்த்துக் குழுப்பிக்கொண்டு, ஆளுநர் உரையின் இறுதியில் மட்டுமே நாட்டுப்பண் (தேசிய கீதம்) இசைக்கப்பட்டதாகவும், தொடக்கத்தில் இசைக்கப்படவில்லையென்றும் கூறி அதைப் பெரிதுபடுத்த முயன்றார். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அரசால் தயாரிக்கப்பட்ட உரையைப் படித்திட மறுக்கின்ற ஒருவர்தான் (ஆளுநர்) உரையை கேலிக்குரிய, நையாண்டிக்குரிய போலிமையாக ஆக்கினார் என்பது நாடாளுமன்ற மக்களாட்சி முறையில் ஓர் ஆளுநரின் பங்கு பற்றி புரிந்து கொள்கிற எவருக்குக் தெரியும். அரசியல் களத்தில் தேர்தல்களில் போட்டியிட்டு வெற்றிபெறுகின்ற கட்சிகளால்தான் அரசாங்கங்கள் நடத்தப்படுகின்றன. கொள்கை அறிக்கைகளில் உண்மையாகவோ மிகைப்படுத்தியோ தங்களுடைய சாதனைகளைப் பறைசாற்றிக் கொள்ள முயல்வது எதரிபார்க்கப்படக் கூடியதுதான். எதிர்க் கட்சியினரும் மக்களும் தான் இவ்வுரையின் உள்ளடக்கப் பொருளைப் பற்றித் தீர்மானிக்க வேண்டியவர்களே தவிர, ஆளுநர் அல்லர்.

வழக்கமான உரையை அதிலிருந்த தகவல் அடிப்படையிலும் தார்மிக அடிப்படையிலும் இரவி படிக்க மறுப்பதன் நிலைக்கக் கூடிய தன்மையை அறிந்திட ஒருசிறிய சோதனை, பாரதிய ஜனதா கட்சி ஆட்சி நடத்தும் ஒரு மாநிலத்தின் ஓர் ஆளுநரோ, குடியரசுத் தலைவரோ இவ்வாறு செய்வாரா? என்கிற கேள்வியை எழுப்புவது தான். தவறாக வழிநடத்துகின்ற அல்லது தவறான தகவல் என்று துல்லியமாக அவர் எதையும் கூறிடவில்லை; ஆளுநரின் உரையில் ஒன்றிய அரசைக் குறை கூறக்கூடாது. விமரிசிக்கக்கூடாது என்றோ, ஒன்றிய அரசின் கொள்கைகளுக்கு எதிராக கொள்கை அறிவிப்புகள் எதையும் செய்திடக் கூடாது என்றோ கோருவது, அரசமைப்புச்சட்டப்படி ஆதாரங்கொடுத்து நிலைநிறுத்த முடியாத தாகும்.

ஆளுநர் உரையின் தமிழாக்கத்தை பேரவைத்தலைவர் படித்தபின்பு ஆளுநர் மீது கண்டனக் கணையை பேரவைத்தலைவர் தொடுத்திருக்கக்கூடாதென்கிற ஆளுநரின் கருத்து நியாயப் படுத்தப்ப டக்கூடியதாகும். அரசியல் சட்டப்படி கடமையாற்றுவோரின் அப்படிப்பட்ட நடத்தை பேரவையின் கண்ணியத்தைக் குறைவுபடுத்தி விடும்.

மத்தியில் ஆளும் கட்சியின் அரசியல் முகவர்களாகச் செயல்படுகின்ற ஆளுநர்களின் மனப்பாங்கு பெரும் பிரச்சினையாக இன்னமும் இருக்கிறது. நாட்டில் ஆளுநர் பதவி வகித்திட, பட்டறிவுடைய, சமுதாய மதிப்புக்குரிய உயர்நிலையினர் ஒரு போதும் குறைவாக இல்லை; ஆனால் ஒருமுறை பணியமர்த்தப்பட்டுவிட்டால் அவர்கள் அரசியல் புதர்க் காட்டுக்குள் நுழைவதற்கு அதே அளவுக்கு ஆர்வமாக இருக்கின்றனர். இதுவே இந்திய, அரசமைப்புச் சட்டமுறையின் கெட்ட வாய்ப்பான தனிச்சிறப்புக் கூறாகும். அரசியல் எதிரிகளால் நடத்தப்படும் அரசாங்கங்களுக்கு எதிராக இரகசியமாக கீழறுப்பு வேலை செய்தல், இடையூறு செய்தல் ஆகியவற்றை தங்களுடைய கடமைகள் என்று அவர்சள் நம்புகின்றனர் போலும்.

உண்மையான நையாண்டிக்குரிய கேலிக்குரிய போலி மை என்பது, கேள்விக்குரிய அல்லது பிரச்சினைக்குரிய உரிமைகோரல்களின் முறைப்படி தயாரிக்கப்பட்ட உரையில் இல்லை, ஆனால் பதவியில் இருக்கிற போது. அந்தக் கொள்கையுடன் ஆழ்ந்து முரண்படுகின்ற அல்லது அதனை ஏற்க மறுத்திடும் ஓர் ஆளுநரிடத்தில்தான் உள்ளது.

இவ்வாறு ‘தி இந்து’ நாளேடு தலையங்கத்தில் தெரிவித்துள்ளது.

## 3,200 ஏக்கர் பயன்பெறும் வகையில்

# வீடூர் அணையிலிருந்து பாசனத்திற்கு தண்ணீர்!

### அமைச்சர் செஞ்சி மஸ்தான் திறந்து வைத்தார்!

மைலம், பிப், 15 - 3, 200ஏக்கர் நிலங்கள் பயன்பெறும் வகையில் வீடூர் அணையில் இருந்து பாசனத்திற்காக அமைச்சர் செஞ்சி மஸ்தான் தண்ணீரை திறந்து வைத்தார்.

விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் தாலுகா வீடூர் ஊராட்சியில் தொண்டி ஆற்றின் குறுக்கே வீடூர் அணை கட்டப்பட்டுள்ளது. இந்த அணையின் மொத்த கொள்ளளவு 32 கனஅடி ஆகும். கடந்த அக்டோபர் முதல் ஜனவரி மாதம் வரை பெய்த பருவமழை காரணமாக அணையின் நீர்மட்டம் படிப்படியாக உயர்ந்து தற்போது 29.175 கனஅடி தண்ணீர் இருப்பு உள்ளது அதை தொடர்ந்து அணையின் மூலம் பாசனம் வசதி பெறும் விவசாயிகளின் கலந்தாய்வு கூட்டம் ஜனவரி மாதம் 24 ஆம் தேதி நடைபெற்றது.அப்போது அணையின் நீர் இருப்புக்கு ஏற்றவாறு விவசாய சாகுபடிக்கு தண்ணீர் திறந்து விட வேண்டும் என கோரிக்கை வைத்தனர்.

இதையடுத்து அணையில் இருந்து பாசனத்திற்கு தண்ணீரை திறந்து விட முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டார்.

இதையடுத்து வீடூர் அணையில் இருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறக்கும் நிகழ்ச்சி வீடூர் அணையில் நடைபெற்றது. இதில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு அணையின் பிரதான மதகலிருந்து தண்ணீரை திறந்து வைத்தார். பின்னர் அணையின் கால்வாயில் பெருக்கெடுத்து ஓடிய தண்ணீரில் பூ மற்றும் நவதானியங்களை தூவி அவர் வாழ்த்தினார்.

தொடர்ந்து செய்தியாளர்கள் சந்திப்பில் அமைச்சர் செஞ்சி மஸ்தான் கூறுகையில்: விவசாயிகளின் கோரிக்கை ஏற்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின்அவர்களின் உத்தரவின் பேரில் பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. பிப்ரவரி 11 முதல்வருகிற ஜூன் 24ஆம் தேதி மொத்தம் 135 நாட்களுக்கு விவசாய பாசன தேவைக்கு ஏற்ப அணையில் இருந்து வினாடிக்கு 46 கன அடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது. இதன் மூலம் தமிழக பாசன பகுதிகளான சிறுவை, வீடூர், பொம்பூர், பொன்னம்பூண்டி, ஐவேலி, உள்ளிட்ட பகுதிகளில் 2200 ஏக்கர் விலை நிலங்களும், புதுச்சேரி மாநிலத்தில் ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்களும் பாசன வசதி பெறும் இதை விவசாயிகள் முழுமையாக பயன்படுத்தி பயனடைய வேண்டும் என அவர் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் மயிலம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சிவகுமார், மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவர் ஷீலா தேவி சேரன், பொதுப்பணித் துறை செயற்பொறியாளர் சோபனா, உதவி செயற் பொறியாளர் ரமேஷ், உதவி பொறியாளர் பாபு, புதுச்சேரி மாநில இளநிலை பொறியாளர் ஞானசேகரன், மாவட்ட அவைத் தலைவர்டாக்டர் சேகர், மயிலம் ஒன்றிய பெருந் தலைவர் யோகேஸ்வரி மணிமாறன், ஒன்றிய செயலாளர்கள் மணிமாறன், செழியன், பொதுக்குழு உறுப்பினர் வீடூர் ரவி, துணைத் தலைவர் புனிதா, ஊராட்சி மன்ற தலைவர் ஜெகதீஸ்வரி பிரகாஷ், மாவட்ட பிரதிநிதிகள் பிரகாஷ் , ஒன்றிய கவுன்சிலர் சுந்தரி தமிழரசன், மாவட்டப் பிரதிநிதி ஜெயராமன் , விவசாய துணை செயலாளர் நெடி சுப்ரமணியன், வட்டாட்சியர்கள் சிவா, நாராயண மூர்த்தி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.




## தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

**மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்களின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம்**

**இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு**

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆற்றிய கழகப்பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் மாவட்ட வாரியாக, எனது தலைமையில், மாநிலத் துணைச் செயலாளர்கள் முன்னிலையில் குறிஞ்சி இல்லத்தில் வருகிற 14 மற்றும் 15–ஆம் தேதிகளில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தாங்கள் பராமரித்து வரும் மினிட் புத்தகம், கழகப் பணிகள் குறித்த பத்திரிகைச் செய்திகள், புகைப்படங்கள் ஆகியவற்றுடன் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டு கொள்ளப்படுகிறார்கள்.

ஆய்வுக் கூட்ட விவரம் வருமாறு :

| நாள் | மண்டலம் | நேரம் |
|---|---|---|
| 15.02.2024 வியாழக்கிழமை | 3 | மாலை 4.00 – 6.00 மணி |
| | 4 | மாலை 6.00 – 8.00 மணி |

அன்பகம்
சென்னை – 18.
நாள் : 10–02–2024.

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி